DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S.59/2021** |
| **Deposition of witness for** | : | **Defendant** |
| **Serial No. of Witness** | : | **DW2** |
| **Name** | : | நான்சி |
| **Father's Name** | : | செல்லத்துரை |
| **Village** | : | பாளையங்கோட்டை |
| **Taluk** | : | பாளையங்கோட்டை |
| **Age** | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of 13.02.2026

**சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை.**

நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் நாங்குநேரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமை இடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சர்வே எண் 205 குரிய புல வரைபடம் உண்மை நகல் கொண்டு வந்துள்ளேன். அது **சா.சா.ஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 219 குரிய புல வரைபடம் உண்மை நகல் கொண்டு வந்துள்ளேன். அது **சா.சா.ஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண் 219/6 குரிய அடங்கல் உண்மை நகல் **சா.சா.ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 205/18 சி குரிய நத்தம் அடங்கல் உண்மை நகல் **சா.சா.ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 205/18 சி குரிய நத்தம் சிட்டா உண்மை நகல் **சா.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 205/18 குரிய அ பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சர்வே எண் 219 குரிய அ பதிவேடு உண்மை நகல் **சா.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சர்வே எண் 205/18 சி என்பது ஜெபசிந்தியா கணவர் பெயர் பரஞ்சோதி சாமுவேல் மற்றும் பரஞ்சோதி சாமுவேல் தந்தை பெயர் கந்தசாமி என்பவர் பெயர்களில் உள்ளது. சர்வே எண் 205/18 சி ன் மொத்த விஸ்தீரணம் 9.20 ஏர்ஸ். சர்வே எண் 219/6 என்பது சர்கார் புறம்போக்கு காலிமனை என்று உள்ளது. அது யார் பெயரிலும் இல்லை. அது அரசுக்கு பாத்தியப்பட்ட இடம் ஆகும். அதன் விஸ்தீரணம் 0.13 ஏர்ஸ் ஆகும். சர்வே எண் 219 என்பது அ பதிவேட்டின் படி சாலை என்று உள்ளது.

சர்வே எண் 205/18 சி க்கு கீழ்பக்கம் தான் 219/6 உள்ளது. அது முடுக்கு போன்ற அமைப்பாக உள்ளது. சர்வே எண் 219/6 க்கு கீழ்ப்பக்கம் சர்வே எண் 219/7 உள்ளது. சர்வே எண் 219/7 என்பது பட்டா எண் 371 ன் படி யோவான் வின்சன்ட் என்பவர் பெயரில் உள்ளது.